12th February 1955]

Sri M. KALYANASUNDARAM :—" இந்தச் செலவை மாகாண சர்க்கார் ஏற்றுக்கொள்கிறார்களா அல்லது மத்திய சர்க்கார் ஏற்றுக் கொள்கிறார்களா ? "

The Hon. Sri C. SUBRAMANIAM :—" மாகாண சர்க்கார் ஏற்றுக் கொள்கிறார்கள்."

Sri V. R. NAGARAJAN :—" Can this House know what is the necessity for putting a guard and incurring this expenditure? "

The Hon. Sri C. SUBRAMANIAM :—" It is a matter of privilege which has been given to ex-rulers. In order to gain a bigger point we had to concede a small point."

Sri S. RAMALINGAM :—" புதுக்கோட்டை மகாராஜா அரண்மனையில் போலீசார் இன்னும் தொடர்ந்து இருக்கவேண்டும் என்று அவர்களே கேட்டுக்கொண்டார்களா அல்லது சர்க்காரே போலீசாரை காவலில் இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்களா ? "

The Hon. Sri C. SUBRAMANIAM :—" சுவதேச சமஸ்தானங்கள் இந்திய யூனியனுடன் இணைக்கப்பட்டபொழுது, இணைக்கப்படும் சமஸ்தானங்களுக்கு என்ன என்ன விருதுகள் கொடுக்கவேண்டுமென்று ஆலோசனை செய்யப்பட்டு, ஒரு உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. அந்த உத்திரவின்கீழ் இது வருகிறது."

Sri M. KALYANASUNDARAM :—" இந்த அரண்மனை காலியாகத் தானிருக்கிறது. ஆகையால் இந்த அரண்மனைக்கு மரியாதை வேண்டுமா, 11-30 a.m
அல்லது இந்த மரியாதையை சடங்காக அனுமதிக்கவேண்டுமா ? அந்தச் செலவைக் குறைக்க இரண்டு கான்ஸ்டபிள்களை மட்டும் வைத்து அந்த அளவில் செலவைக் குறைப்பதற்கு சர்க்கார் முன்வருமா ? "

The Hon. Sri C. SUBRAMANIAM :—" ஒரு தடவையில் இரண்டு கான்ஸ்டபிள்கள்தான் அங்கே நிற்பார்கள். நாள் பூராவும், மாதம் பூராவிற்கும் நிற்பதற்கு 15 பேர்கள் வேண்டியதாக இருக்கிறது. "

Cottage industries for Harijans.

* 658 *Q*.—**Sri A. RATNAM**: Will the Hon the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Director of Industries and Commerce is in charge of any cottage industries meant for the uplift of Harijans; and

(*b*) the extent of work done and the amount spent by the department towards the uplift of Harijans by forming, conducting or aiding small-scale industries in the year 1953–54?

The Hon. Sri M. BHAKTAVATSALAM :—"(*a*) & (*b*) The Director of Industries and Commerce is not in charge of any scheme for the development of cottage industries exclusively meant for the uplift of Harijans except the two flaying and tanning demonstration parties now functioning in this State. A total expenditure of Rs 11,000 was incurred for the maintenance of the demonstration parties referred to above during 1953-51."

[12th February 1955

SRI A. RATNAM :—" ஒரு குறிப்பிட்ட இலாகாவில் குடிசைத் தொழிலுக்கு சிறிய யந்திர சாதனங்களை வைத்து வேலை செய்துகொண்டு வருகிறது. ஆனால் ஹரிஜனங்கள் கடன் வேண்டும் என்றும் அல்லது உதவி வேண்டுமென்றும் பல மனுக்களைப் போட்டுக் கேட்டும் கொடுக்க மறுக்கிறார்கள். ஒரு திட்டம் வகுத்து, ஒரு கமிட்டியை நியமித்து ஹரிஜனங்களுக்கு எந்த சலுகைக் கொடுக்கவேண்டியது என்பதற்கு அதிகாரிகளுக்கு மனது வரவில்லை. அதனால் கனம் அமைச்சர் அவர்கள் கடனோ அல்லது உதவியோ கொடுத்து உதவுவார்களா என்று கேட்க விரும்புகிறேன்."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" உதவி செய்யும் விஷயம் எனக்குக் குறிப்பாகத் தெரியாவிட்டாலும் நான் அறிந்த அளவில் உதவி செய்யும் அளவில் உதவி செய்து கொண்டுதான் வரப்படுகிறது. ஆனால் கடன் கொடுக்கும் விஷயமாக கடனைக் கொடுப்பது என்பது கண்ணை மூடிக்கொண்டு ஹரிஜனங்களாக இருந்தாலும் கொடுத்துவிட முடியாது. பரிசீலனை செய்துதான் கொடுக்க முடியும்."

SRI M. PALANIYANDI :—" டைரெக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸ் அண்டு காமர்ஸ் தலைமையின் கீழும், விஸ்வேஸ்வரய்யா கமிட்டியின் ரிப்போர்ட்டின்படியும் சிறு சிறு குடிசைத் தொழில்களை ஆரம்பிப்பதற்கு திட்டம் வகுத்திருக்கிறார்கள். அந்தந்த இடங்களில் கடன் கொடுக்கும் நிலைமையில் ரெவின்யூ இலாக்காக்களில் எப்படி விவசாயி கடன்பெற தொந்திரவும் பெற வேண்டுமோ அந்த பல தொந்தரவுகள் ஏற்படுகின்றன. அதாவது ஏதாகிலும் செக்யூரிட்டி கட்டவேண்டும் என்று சொல்லுகிறார்கள். சதாரண ஏழைகளுக்கு யார் செக்யூரிட்டி கொடுக்க முன்வருவார்கள். அப்படி இல்லாமல் தனிப்பட்ட முறையில் கடன் வாங்குவதற்கு வேண்டிய திட்டம் வகுக்குமா என்று கேட்கிறேன்."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" கனம் அங்கத்தினர் உருப்படியான ஒரு யோசனையைக் கொடுத்தால் அதை நான் பரிசீலனை செய்கிறேன்."

SRI A. RATNAM :—" இது சிறிய விஷயமல்ல. கனம் மந்திரி அவர்கள் கூறும்போது ஹரிஜனங்களுக்குக்கூட கண்ணை மூடிக்கொண்டு கடன் கொடுக்க முடியாது என்று சொன்னார். தகுதி வாய்ந்தவர்களும், சொத்துள்ளவர்களும், பணமுள்ளவர்களும் யந்திர சாதனங்களை வைத்துக்கொண்டு தொழில் நடத்துகிறார்கள். ஆனால் ஹரிஜனங்களுக்குச் சர்க்கார் கடன் கொடுக்க யாரும் முன்வரவில்லை. குடிசைத் தொழில் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றால் அவர்களுக்கு சலுகை காட்டவேண்டும். இதைப்பற்றி பேசுவதற்கு பல விஷயங்கள் இருக்கின்றன. அதனால் அவைகளைப்பற்றி விவாதிப்பதற்கு ஒரு மணி நேரம்—இன்றாவது அல்லது திங்கட்கிழமை யாவது—ஒதுக்கி விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும். அதிகாரிகள் எந்த அளவில் நடந்துகொள்கிறார்கள், எந்த அளவில் தாழ்த்தப்பட்ட மக்களை புறக்கணிக்கிறார்கள் . . ."

MR. SPEAKER :—" கேள்வியாகப் போடுங்கள்."

SRI A. RATNAM :—" எனவே இதைப்பற்றி விவாதிப்பதற்கு ஒரு மணி நேரம் ஒதுக்கவேண்டும்."

MR. SPEAKER :—" நினைத்த நேரத்தில் கேட்பதற்கெல்லாம் கொடுப்பதற்கு ரூல் கிடையாது. எல்லாவற்றிற்கும் கொடுத்துவிட முடியாது. எழுதிக் கொடுங்கள் யோசித்துப் பார்க்கலாம்."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" குறிப்பான விஷயங்களைச் சொல்லாவிட்டால் விவாதத்தில் நான் என்ன பதில் அளிக்கக் கூடும் ? கடன் கொடுப்பது பரிசீலனை செய்துதான் முடிவு செய்ய முடியும். இதைப்பற்றி ஒரு மணி நேரம் விவாதத்தில் குறிப்பிட்ட விஷயம்பற்றி பேச இருந்தால் அதற்கு பதில் சொல்லலாம். நானே ஒரு கேசில் கிடையாது என்று சொல்லி இருக்கிறேன்.

12th February 1955]

ஒருவர் வந்து பத்தாயிரம் ரூபாய் வேண்டுமென்று கேட்டார். ஆனால் பரிசீலனை செய்து பார்த்ததில் கடன் கொடுப்பதற்கு வேண்டிய நிபந்தனைகள் ஒன்றுமே அனுசரிக்கப்படவில்லை என்டதை கடன் கேட்டவரே ஒத்துக்கொள்ளும்படியாக ஏற்பட்டுவிட்டது. அதனால் சொத்தில்லாமல் எப்படி கடன் கொடுப்பது. அதனால்தான் எங்களால் ஒப்புக்கொள்ள முடியாமல் இருக்கிறது. எப்படி ஒரு மணி நேரம் விவாதிப்பது என்பது தெரியவில்லை."

SRI B. K. NALLASAMI :—" குடிசைத் தொழிலைக் கற்றுக் கொள்வதற்கு என்று ஜப்பானுக்கு சில மாணவர்களை அனுப்ப சர்க்கார் உத்தேசித்திருக்கிறார்களே அதில் ஹரிஜன மாணவர்களை அதிகம் சேர்த்து அனுப்புவார்களா ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" Sir, I have no idea whether any one is proposed to be sent to Japan for studying cottage industries."

SRI P. G. MANICKAM :—" ஆதி காலத்தில் சேரிகளில் ஹரிஜனங்கள்தான் குடிசைத் தொழிலை அநேகமாகநடத்தி வந்தார்கள். அந்தத் தொழில் இப்பொழுது மடிந்துவிட்டது. அப்படிப்பட்ட தொழிலை மறுபடியும் உண்டாக்குவதற்கு கவர்ண்மெண்ட் ஒரு திட்டத்தை ஏற்படுத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" குடிசைத் தொழிலில் ஹரிஜனங்களுக்கு சலுகை காட்டுவதில் எனக்கு மிகுந்த ஆவல் இருக்கிறது. அதைப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். திட்டம் உருப்படியான பிறகு ஹரிஜனங்களையெல்லாம் அதில் ஈடுபடுத்த வேண்டுமென்பதுதான் என்னுடைய ஆவலும்."

Marina Canteen and Swimming Pool.

* 659 *Q.*—SRI A. RATNAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state the income to the Government from the Marina Canteen and Swimming Pool?

THE HON. SRI S. S. RAMASAMY PADAYACHI :—" The Government do not derive any income except a ground rent of about Rs. 4,900 per annum from the Marina Canteen and the Swimming Pool, which are run by the Corporation of Madras."

Market for pepper.

* 660 *Q.*—SRI K. MADHAVAN NAMBIAR : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the State Government had approached the Central Government to bring about a steady market for pepper from the depressed market rates; and

(*b*) if so, the stage at which the matter stands at present?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" (*a*) & (*b*) No such specific request has been made by the Madras Government to the Government of India. However, requests made by the Kasaragod Taluk Pepper Growers' Association, viz., (1) the export duty on pepper might be reduced and (2) foreign markets in pepper might be stabilized were forwarded to the